எங்கோ சென்றுவிட்டனர். முகூர்த்தத்திற்கு நேரமாகிவிட எல்லோரும் ஆளுக்கு ஒரு மூலையாக போய் தேட தொடங்கினார்கள். "ஆளுமை வளர்ச்சி நூலில்" மாறுபட்டு சிந்திப்பது எப்படி என்ற தலைப்பில் கூறியிருப்பது போல் நான் மாற்று வழியில் சிந்தித்து பார்த்தேன். உடனே புதிய சிந்தனை பிறக்க, அருகில் உள்ள கோயிலுக்கு வழிகேட்டு போனேன். கிராமத்து கோயில்களில் ஒலிப்பெருக்கிகள் இருக்கும் என்றும் எனக்கு தெரியும். கோயில் பொருப்பாளரிடம் சொல்லி அறிவிப்பு செய்தேன். வழி தவறி போன உறவினர் அறிவிப்பு கேட்டு உடனே வந்து சேர்ந்தார்கள். என்னை புதிதாய் கண்டறிய உதவிய காரைமைந்தனுக்கு நன்றி.

**- தூயவன்**

ஓவிய ஆசிரியர், பழவேற்காடு.

ஆளுமை வளர்ச்சி நூல் படித்து அப்படியே பின்பற்றினேன். இப்பொழுது வேலைக்கான நேர்முக தேர்வில் சுலபமாக வெற்றிப்பெற்று நல்ல வேலைக் கிடைத்தது. இந்த நூலை படித்தப்பின் தான் நான் என்ன தவறுகள் செய்து வந்திருக்கின்றேன் என்று புரிந்து மாற்றிக் கொண்டேன்.

**- வசந்த குமார்**

விவேகானந்தர் நகர், பெங்களூர்

நூலில் உள்ள தலைமைத்திறன் பயிற்சிகளும், தொடர்பு திறன் (Communication Skills) பயிற்சிகளும் எளிமையாகவும் நல்ல பலன் உள்ளதாகவும் உள்ளது.

**- ஜோசப் சந்திரன்,**

திருவணந்தபுரம்.

காரைமைந்தனின் ஆளுமை வளர்ச்சி நூல் எனக்கு மட்டுமல்ல என் பிள்ளைகளுக்கும் மிகவும் பிடித்தமான நூல். இந்நூல் எனக்கும் என் பிள்ளைகளுக்கும் மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இதில் தரப்பட்டுள்ள பயிற்சிகளும், வழிகாட்டல்களும் மிகவும் பயனுள்ளதாக உள்ளது. குறிப்பாக பகுதி 7-ல் வரும் பயிற்ச்சிகள் உருவாக்கு திறனை (Creativity Skills) வளர்த்துக்கொள்ள நன்கு உதவுகின்றன. இதில் உள்ள பயிற்சி 3-யை என் பிள்ளைகளுக்கு கொடுக்க அவர்கள் விரும்பி அதை செய்தனர். என்னையும் என் பிள்ளைகளையும் நன்கு ஊக்குவித்த இந்த நூலை தந்த ஆசிரியருக்கும் என் நன்றிகள்.

**-திரு.இராமமூர்த்தி**

விர்கோ நகர், பெங்களூர்.